★ பதுக்கலும் ஒரு சமூக விரோதக் குற்றமே


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 11 இதழ் 135
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25 – 06 – 1992


## காவல்துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய போர்க்கால சூழ்நிலையை சாட்டாக வைத்து கொள்ளை இலாபம் பெறும் நோக்குடன் பொது மக்களின் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றான மண்ணெண்ணையைப் பதுக்கும் நடவடிக்கைகளில் சில வர்த்தகர்கள் மீண்டும் ஈடுபட்டுள்ளனர். விடுதலைக்காகப் போராடும் மக்கள் மீது இவ்வாறான தேவையற்ற துன்பத்தையும், துயரத்தைம் திணிக்க முயல்வது மன்னிக்க முடியாத குற்றமாகும். இதை ஒரு சமூகவிரோதச் செயலாகவே

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் எங்கும் மண்ணெண்ணை பதுக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீண்டும் மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டை வியாபாரிகள் ஏற்படுத்தி வருகின்றார்கள்

கடந்த இரு நாட்களாக மண்ணெண்ணை வியாபாரிகளும், அங்காடி வியாபாரிகளும் மண்ணெண்ணையைப் பதுகி வைத்துக்கொண்டு ரகசியமாக கூடிய விலைகளில் விற்பனை செய்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதேநேரம், தினமும் பல லொறிகளில் யாழ். மாவட்

[4ம் பக்கம் பார்க்க]

# மட்டுநகரில் புலிகள் அதிரடி

# ஆறுபடையினர் உயிரிழப்பு

## - ஆயுதங்களும் மீட்பு -

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தின் சின்னக்காந்திபுரம் என்னுமிடத்தில் இராணுவ அணியொன்றை விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து நவீன ரக ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.**

பழுகாமம் இராணுவமுகாமிலிருந்து துப்பங்கேணி முகாமை நோக்கி 75-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் நேற்று முன் தினம் பகல் 10-45 மணிக்கு ரோந்து சென்றபோதே சின்னக்காந்தபுரத்தில் புலிகள் இராணுவ அணியை இடைமறித்துத்தாக்கியதில் 6 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இராணுவத்தினருக்கு உதவியாக, பழுகாமம், வெல்லாவெளி,

[4-ம் பக்கம் பார்க்க]

## வடக்கு - கிழக்கில் மோதல் அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் கடந்தவாரம் முதல் டும் மோதல்கள் அதிகரித்துள்ளதாக இராணுவவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் பிரதேசங்களில் பெருமளவில் புலிகளின் தாக்குதல் நடப்பது இராணுவ அதிகாரிகளுக்கு பெரும் கவலையளித்துள்ளதாம்.

பாதுகாப்பு படையினருக்கு இது தீராக் கவலையாயிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது. (சி)

## பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை, சேந்தாங்குளம் கடற்பரப்பில் ரோந்து புரியும் பீரங்கிப்படகுகள் நேற்றுக் காலை 8மணியளவில் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டன.

மாதகல், இளவாலை கடற்கரையோரப் பகுதிகளை நோக்கியே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. (56)

## கஞ்சிகுடிச்சாறில் கடும் மோதல்

(கொழும்பு)

மட்டக்களப்பில் கஞ்சிகுடிச்சாறு, பழுகாமம் பகுதியில் கடந்த இரு நாட்களாக கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் இராணுவத்தினரும், விசேட அதிரடிப்

(4ம் பக்கம் பார்க்க)

## 'மெக்கா' ஊர்வலத்தில் தமிழ் சுலோக அட்டை

[மெக்கா]

அமெரிக்கா, இஸ்ரேலின் நடவடிக்கைகளை எதிர்த்து இம்முறை புனித மெக்காவில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழ் மொழியிலும் பல சுலோக அட்டை

(4ம் பக்கம் பார்க்க)

## மஹாராஜபுரம் சந்தானம் கார் விபத்தில் பலி

(சென்னை)

பிரபல கர்நாடக இசை மேதை மகாராஜபுரம் சந்தானம் நேற்று தமிழகம் உருத்திரபாண்டியில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் பலியானார். அவருடன் பிரயாணம் செய்த அவருடைய நண்பரான இராமநாதன் என்பவரும் பலியானார்.

காரில் பயணம் செய்த அவருடைய மனைவியும் மற்றொரு பெண்ணும் படுகாயமடைந்து

[4ம் பக்கம் பார்க்க]

## தமிழ் அகதிகளை அனுப்பியதே ஜெயலலிதாவின் சாதனை

(லண்டன்)

இலங்கை அரசியலில் ஒரு சுமுகமான சூழ்நிலை இல்லாமல் இருக்கும் இவ்வேளையில் தமிழ்நாட்டை நம்பி வந்த இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி இலங்கைக்கு வலுக் கட்டாயமாக அனுப்பியது தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கடந்த ஒருவருட தனது ஆட்சியில் செய்த மாபெரும் சாதனை என்று பி. பி. ஸி. நேற்று வர்ணித்தது.

அத்துடன் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தையும், எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தியதுடன், மத்திய அரசை வலியுறுத்தி விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடைசெய்ததுமே, முதலமைச்சர் செய்த மற்றுமொரு சாதனை என்றும் பி பி ஸி மேலும் தனது வர்ணணையில் குறிப்பிட்டுள்ளது. (வி)

## சாவகச்சேரிப் பகுதியில் விமானங்கள் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியை நேற்று பிற்பகல் 3 மணியளவில் குண்டுவீச்சு விமானங்கள் வட்டமிட்டு நோட்டமிட்டுள்ளன,

15 நிமிடம்வரையில் சாவகச்சேரி, கொடிகாமம், மீசாலை மிருசுவில் ஆகிய குடியிருப்புப் பகுதிகளை நோக்கியே இவை வட்டமிட்டு மக்களை அச்சுறுத்தின.

நேற்றுமுன் தினம்சாவச்சேரி புத்தூர் சந்தியில் குண்டுவீசப்பட்டதும் தெரிந்ததே. (56)

## பேராசிரியர் காலமானர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சட்டவைத்தியத் துறைப் பேராசிரியர் நவரத்தினம் சரவணபவானந்தன் நேற்று முன்தினம் கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னாரது மறைவையொட்டிய அனுதாபக் கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவர் யாழ். வைத்தியசாலை

[4-ம் பக்கம் பார்க்க]

ராஜீவ் கொலை வழக்கு:

## குற்றப்பத்திரத்தை ஏற்க சந்தேகநபர்கள் மறுப்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலைசம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்ட 26 எதிரிகளும் தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை ஏற்றுக் கொள்ளாது மறுப்புத் தெரிவித்தார்கள்.

கடந்த 17ம் திகதி சென்னையில் விசேட நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி திரு சுந்தர பாண்டியன் முன்னிலையில் ஆரம்பமான இவ்வழக்கில், ஆஜர் செய்யப்பட்ட எதிரிகள் 26 பேரும், தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டகுற்றப் பத்திரிகை ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டதை ஆட்சேபித்து அதை ஏற்க மறுத்தனர்.

தமிழில் குற்றப்பத்திரங்கள் வழங்கப் படவேண்டுமென இவர்கள் நீதிபதியிடம்

[4-ம் பக்கம் பார்க்க]

## இந்தியாசென்றுவாதிடுவதை இலங்கையால் தடுக்க முடியாது

(கொழும்பு)

''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கைத்தமிழர்களுக்காக நான் வாதாடுவதை இலங்கை அரசு தடை செய்யமுடியாது''.

இவ்வாறு பிரபல சட்டத்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விண்ணப்பப் படிவம்

விவசாயம் விளையாட்டுத் துறை, மனையியல் ஆசிரியர்களுக்கான படிவம் விற்பனையாகிறது. முழு விபரங்களையும் எமது ஸ்தாபனத்தில் பார்வையிடலாம். நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய் (சி-6452)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரிச் சந்தைக்கு அருகாமையில் நன்னீர்க் கிணறு, குடியிருப்பு வசதிகளுடன் 5 பரப்புக்காணியும், சிவன் கோவில் வீதியில் 3 1/4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, ஸ்ரேசன் றோட். சாவகச்சேரி. [சி-6449]

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### சுவையகம்

தூரமான பாண், பணிஸ், கல்பணிஸ் போன்ற பேக்கரித் தயாரிப்புகள் அனைத்தையும் சாவகச்சேரியில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்: 'சுவையகம்' பிரதான வீதி. (யூனியன் பெற்றோல் நிலைய அருகாமை) சாவகச்சேரி. (எ-2218)

### நீமியா உரம்

நெற்பயிருக்குச் சிறந்த அடிக்கட்டு உரம் அனைத்துப் பயிருக்கும் உகந்தது. பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்புத் தருவது நீமியா உரம். கூடிய விளைச்சலைத் தருவது நீமியா உரம். கிலோ ரூ 15/-. 20 கிலோ ரூ 200/- அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற். (ஏ-2244)

---

வெளிவாரி

## பரீட்சை பதிவு தேதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிவாரிப்பரீட்சை முதற்கலை, முதல் வர்த்தக நெறிக்கானபதிவு திகதி யூலை மாதம் 4ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ரயில் - பஸ்

## விபத்தில் 32 பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனிசியாவில் ரயில்-பஸ் நேற்றுமுன்தினம் மோதிக்கொண்டதில் 32 பேர் கொல்லப்பட்டனர். (க)

பாலர் பாடசாலை

## அபிவிருத்திக்கு நிதி உதவி

(உடுவில்)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சனசமூக நிலையங்களினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 'கெயா' ஸ்தாபனத்தினரின் உதவி கிடைக்கவுள்ளது.

கெயர் ஸ்தாபனப் பிரதிநிதிகள் சுமார் 5 லட்சம் ரூபா வரை பாடசாலை அபிவிருத்திக்கு வழங்க சம்மதம் தெரிவித்ததாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தெரிவித்தார். (109)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக்குழுவின் ஆதரவில் சபீனு பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி மட்டுவில் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டரங்கில் திருமதி புஸ்பராணி லியோன் தலைமையில் நடைபெற்றது.

தேசியக் கொடியினை தென்மராட்சி விடுதலைப் புலிகள் கல்விக் குழுப் பொறுப்பாளர் மகேசன் ஏற்றிவைத்தார்.

சிறப்புவிருந்தினராக கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா கலந்துகொண்டு உரையாற்றினார். [56]

---

திருக்கோவிலில்

## 2224 அகதி குடும்பங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருக்கோவிலில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2224 குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகள் பதினெட்டு இடங்களில் தங்கியுள்ளார்கள் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

இராசாவின்தோட்ட

## மக்களுக்கு குழாய்க் கிணறு

[யாழ்ப்பாணம்]

அரச சார்பற்ற நிறுவனங்களுள் ஒன்றாகிய சர்வோதயம் கஷ்டப்பட்ட ஏழை மக்களுக்கு குழாய்க் கிணறுகளை அமைத்து வருகின்றது.

இராசாவின் தோட்டத்தில் வாழுகின்ற மக்களுக்கு அண்மையில் ஒரு குழாய்க் கிணறு அமைத்து மக்களின் பாவிப்புக்கு வழங்கியுள்ளார்கள்.

மேஜர் முரளி

## ஞாபகார்த்த விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுவிழா சம்பந்தமான கூட்டம் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புச் செயலகத்தில் கடந்த 21ம் திகதி நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சகல கோட்டத்தில் இருந்தும் உடற்கல்வி ஆசிரியர்கள் பங்குபற்றினார்கள். கொத்தணி கோட்டம், மாவட்டம் என்ற அடிப்படையில் போட்டிகள் நடைபெறும் எனத்தீர்மானிக்கப்பட்டது.

இவ்விளையாட்டு விழா சம்பந்தமான சுற்றுநிருபம் விரைவில்பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

இவ் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர், கொத்தணி அதிபர் அதிபர், ஆசிரியர், மாணவர் யாவரின் ஒத்துழைப்பையும் கோருவதெனவும் முடிவுசெய்யப்பட்டது. (க)

---

## 2ம் தவணை பொதுப்பரீட்சை

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பொதுப்பரீட்சை ஜூலை மாதம் 20 ஆம் ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது,

சுமார் 102 பாடசாலை மாணவர்கள் தோற்றவுள்ள இப்பரீட்சைக்கான சகல நடவடிக்கைகளையும் கோட்டப்பிரிவு பரீட்சைக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## விவசாய விஞ்ஞான கண்காட்சி

[வட்டுக்கோட்டை]

வட்டு கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் விவசாய, விஞ்ஞான மனையியல் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் பயனடையும் வகையில் பரந்த அடிப்படையில் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது. (139)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு சுன்னாகம் மயிலணி கந்தசுமாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 25-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவம் நடைபெறும்.

ஜூலை5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 6-ந் திகதி திங்கட்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## மனனப் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வீரபத்திரசிவன் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய இந்து மாமன்றம் மாணவர்களுக்கிடையே "ஆத்திசூடி" மனனப் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.

வயதுக் கட்டுப்பாடின்றி ஆத்திசூடி முழுவதையும் பிழையின்றி ஒழுங்காக மனனம் செய்து ஒப்புவிக்கும் அனைவருக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (139)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கானஒப்பந்தகாரரைத் தெரிவு செய்தல் - 1992

1992ஆம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான ஒப்பந்தகாரரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

படிவங்கள் வழங்கப்படும் திகதி 29-06-92 நண்பகல் 12-00 மணிவரை.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 30-06-92 நண்பகல் 12-00மணிவரை.


மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-06-1992.

[எ-2247]

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
24-03-1934

★

உதிர்வு:
06-07-1991

★

திதி:
25-06-1992

### தவில்மேதை N. R. சின்னராசா
(இணுவில்)

தவிலுண்டு! தவிலோடு நீயிருக்க அசையாத தலையுண்டோ?
ஆடாத மனமுண்டோ? தாளம் போடாத கையுமுண்டோ?
தவிலுண்டு தவிலோடு நீயில்லை
தவிலோடு உனைக்காணும் கண்ணுக்கு என்ன சொல்ல?
நாதத்தை நயந்து கேட்கும் காதுக்கு என்ன சொல்ல?
நடைகளைப் புகழ்ந்து பேசும் நாவுக்கு என்ன சொல்ல?
தவிலுண்டு தவிலோடு நீயில்லை.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
சிங்கம்ஸ் பார்மஸி,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி 6455)

---

## இராசி பலன்

25 06 1992
வியாழக்கிழமை
(தமிழுக்கு ஆனி 11)

தசமி ந. இ. 1-22 வரை, அச்சுவினி வைகறை 5-30 வரை, அமிர்தயோகம், இராகுகாலம் பகல் 1-25 முதல் 2-55 வரை, சுபநேரம் காலை 7-25 முதல் 8-55 வரை.

மேடம்: உறவினர் நன்மை, தொழில்வருவாய், பணவரவு.

இடபம்: விபரீத எண்ணம், மனப்போராட்டம், அதிக செலவு.

மிதுனம்: தொழில் லாபம், பணியாள் சகாயம், புத்திரர் பெருமை

கடகம்: அதிர்ஷ்ட வாய்ப்பு, அன்னியர் உதவி, தெய்வீக செலவு.

சிங்கம்: குடும்ப விரிசல், சத்துரு தொல்லை, அலைச்சல்,

கன்னி; காரணமற்ற துன்பம், கடுமையான நோய், கவலை

துலாம்: சுபநிகழ்ச்சி, கல்வியால் பெருமை, மனமகிழ்ச்சி,

விருச்சிகம்: மனதியானம், குடும்ப சிறப்பு, காரியசித்தி.

தனுசு: வாழ்க்கைத்துயர். அகால போஜனம், பதட்டம்.

மகரம்: பெண்கள் ஆதரவு புதிய சிந்தனை, தொழில் சிறப்பு.

கும்பம்: இனசன வருகை, உல்லாச பயணம், கடன் வரவு

மீனம்: போராட்ட உணர்வு சகோதர பகை, அவமதிப்பு,

சோஸ்யர்

---

## பூசிக்கின்றோம்!

இவ்வுலகக் கடன் தீர்த்து பரமனடி புகுந்த

### ஓராண்டு "திவசம்"
25-06-92

★  ★

பிறவி எடுத்தது:
01-09-1919

முடித்தது:
06 07-1991

### அமரர் திருவாட்டி நவமணி சுப்பிரமணியம்

மனிதப்பிறவி எடுத்து எங்களுக்காக வாழ்ந்து எமக்கு இனிய வாழ்வைத் தந்து உங்கள் கடன் முடித்து தெய்வமாகிய உங்களைத் தினமும் பூசிக்கின்றோம்.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மணிரங்கம்",
41, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (சி 6454)

★ யாழ். போதனா வைத்தியசாலை குறைபாடுகள்:

# டாக்டர்கள், தாதிகள், ஊழியர் பற்றாக்குறை; மருந்துவகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த இருவருடங்களுக்கு மேலாக நிலவி வரும் குறைபாடுகளினால், நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்குறைபாடுகளை நாம் விரைவில் நிவர்த்தி செய்து தருவோம் என சுகதார அமைச்சு அவ்வப்போது கூறி வந்துள்ள போதிலும், யாழ். மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் ஏற்பட்ட பின்பே, யாழ். போதனா வைத்தியசாலையின் தற்போதைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமென மேற்படி அமைச்சு ஒரே அடியாகக் கைவிரித்துள்ளதினால் நோயாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படப்போவதாக தரிவிக்கப்படுகிறது.

**தினம் 1200 நோயாளர்**

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தற்போது தினமும் 1200க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள், ஆயிரக்கணக்கில் நோயாளர்கள் வார்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இவ்வளவு பெருந்தொகையான நோயாளர்களுடன் ஒப்பிடும்போது இங்கு தற்போது சேவையாற்றும் டாக்டர்களின் தொகை மிகக் குறைவாகவே இருக்கின்றது. கடந்த காலங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேவையாற்றிய டாக்டர்களில் பெரும்பாலானோர் பிற மாவட்டங்களுக்கும். வெளிநாடுகளுக்கும் சென்று விட்டார்கள் அண்மைக்காலங்களில் 34 டாக்டர்கள் வெளியிடங்களுக்குச் சென்றுள்ளார்கள் அதேநேரம் ஒரே ஒரு டாக்டர்மட்டும் வெளிமாவட்டத்திலிருந்து இங்கு சேவையாற்ற வந்துள்ளார்.

**டாக்டர்கள் பற்றுக்குறை**

டாக்டர்களின் பற்றுக்குறையை போக்குவதற்காக மருத்துவபீட மாணவர்கள் பலர் தற்காலிகமாக சேவையாற்றுவதற்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

தேவா

இதேபோல் தாதிகள் பற்றுக்குறையும் பெருமளவில் இங்கு உள்ளது. இங்கு சேவையாற்றும் தாதிமார்கள் பிற மாவட்டங்களுக்கும் மாற்றலாகி செல்வது குறைவாகஇருந்தாலும் 400 தாதிகளுக்கு மேல் சேவையாற்றவேண்டிய யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது 200 தாதிமார்களே சேவையாற்றி வருகின்றார்கள்.

**சேவையில் ஓய்வுபெற்ற ஊழியர்**

ஊழியர்களைப் பொறுத்த மட்டில் சிற்றூழியர்களாக இருந்தாலும் சரி, தொழில்நுட்ப ஊழியர்களானாலும் சரி எம். எல். ரி எனப்படும் ஆய்வு கூட ஊழியர்களானாலும் சரி தேவைக்கு ஏற்றளவு இல்லையென்றே கூறப்படுகின்றது. சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்கள் பலர் மீண்டும் சேவைக்கு அழைக்கப் பட்டதினாலேயே இப்பிரச்னை தற்காலிகமாகச் சமாளிக்கப்பட்டு வருகின்றது

இதே போலத் தளபாடங்களும், படுக்கை வசதிகளும் மிகக் குறைவாகவேயுள்ளன ஒரு போதனா வைத்தியசாலையின் தகுதிக்கு ஏற்றவாறு தளபாடங்கள் இங்கு கிடையாது. இதனால் கடுமையான நோயுள்ள நோயாளிகள் கூட தரையில் படுக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

**ஜெனரேற்றர் இல்லை**

யாழ். போதனா வைத்தியசாலையில்கதிர்ப்பட (எக்ஸ்ரே) கருவி ஒன்று மட்டுமே தற்போது இயங்கி வருகிறது. இன்னொரு எக்ஸ்ரே கருவியும் இங்கு உண்டு. ஆனால் இக்கருவியை இயக்குவதற்குத் தேவையான மின்சாரத்தை வழங்கக்கூடிய ஜெனரேட்டர்கள் இங்கு இல்லை. இதனால் அத்தியாவசிய சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மட்டுமே எக்ஸ்றே படம் மட்டுப்படுத்தப்பட்டு எடுக்கப்படுகின்றன. இங்கு தற்போது இரண்டு சிறிய ஜெனரேட்டர்கள் மட்டுமே பாவிக்கப்படுவதனாலும் எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம் வழங்கப்படுவதினால் ஆஸ்பத்திரிச் சவச்சாலையிலுள்ள குளிர் சாதனக் கருவிகளை பாவிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கு ஒரு சில குறிப்பிட்ட தினங்களுக்கு மட்டுமே இறந்தவர்களின் சடலங்களைப் பாதுகாக்க முடிகிறது.

போதனா வைத்தியசாலையில் மூன்று அம்புலன்ஸ் வண்டிகள் இருந்தபோதிலும் தற்போது ஒரு அம்புலன்ஸ் வண்டி மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது மற்ற இரு வண்டிகளில் ஒன்று பழுதடைந்த நிலையிலுள்ளது மற்ற வண்டி பெற்றோலில் ஓடுவதினால் அதனையும் சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளது.

**சேதமடைந்த கட்டிடங்கள்**

குண்டு வீச்சினால் சேதமடைந்த யாழ். போதனாவைத்தியசாலையின் கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கு சீமெந்தை இங்கு எடுத்து வருவதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளதால் திருத்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. சேதமடைந்த டாக்டர்களின் விடுதிகளை திருத்தம் செய்ய முடியாததினால், அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் டாக்டர்கள் தற்போது தங்கியுள்ளார்கள். இதற்காக மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா செலவு செய்யப்படுகின்றது.

**மருந்து தட்டுப்பாடு**

எல்லாவற்றையும்விட இப்போதனா வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மாதாந்தம் வரும் கப்பலில் அரசு போதியளவு மருந்து வகைகளை அனுப்பி வைத்துள்ளதாக கூறிவருகின்றபோதிலும் சில நாட்களுக்கு தேவையான சில மருந்துகளே இக்கப்பலில் வருகின்றது. குறிப்பாக விசர்நாய் தடுப்பூசி மருந்து இங்கு பெரும் பிரச்னைக்குரியதாகவுள்ளது. மாதாந்தம் 2500 சி. சி. அளவு கொண்ட ஏ. ஆர். வி. விசர்நாய்க்கடி மருந்தை இங்கு அனுப்புகிறார்கள். இந்த மருந்து ஆக 48 பேருக்கு மட்டுமே போதுமானதாகவுள்ளது.

---

## 7வது தொடர் நிவாரணம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் 7ம் தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைக்கான பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இம்முத்திரைகளை உடையவர்கள் 1ம், 2ம் புள்ளிகளுக்குரிய உணவுப் பொருட்களை மேற்படி சங்கத்தின் தாவடி, அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலடி, பன்னாலை டத்தரிப்பு ஆகிய இடங்களில் உள்ள நிவாரணக் கிளைகளில் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (85)

## வருடாந்த மஹோற்சவம்

(வட்டுக்கோட்டை)

பிரசித்திபெற்ற வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 7ம் திகதி வரை திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. (139)

## மாகியப்பிட்டியில் விசேட நிவாரணக் கிளை

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்விசேட நிவாரணக் கிளை ஒன்று மாகியப்பிட்டிச் சந்தியில் திறக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கப் பாவனையாளர்களுக்கு நிவாரணப்பொருள்களை வழங்குவதற்காக ஏற்கனவே 10 நிவாரணக் கிளைகளை இச்சங்கம் பல்வேறிடங்களிலும் ஆரம்பித்திருந்தது. 11வது கிளையாக மாகியப்பிட்டி சந்தியில் மேற்படி கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கிளையினால் தற்போது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரைக்கான பொருள்கள் வழங்கப்படுகின்றன. (86)

## ஜூன் மாத ஒய்வூதியம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஜூன் மாதத்திற்குரிய ஓய்வூதியமும் பணமாக வழங்கப்படுகிறது.

மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் இயங்கும் இக்கிராமிய வங்கியில் வழங்கப்படும் ஓய்வூதியத்தை தாமதமின்றி பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. [86]

## கோழிகளுக்கு நோய் தடுப்பூசி

[மானிப்பாய்]

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கோழிகளுக்கு தூக்கநோய் தடுப்பூசி ஏற்றப்பட்டது. (71)

## குடும்ப அட்டை மீளாய்வு

[காங்கேசன்துறை]

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள குரும்பசிட்டி இல. 242 கிராம சேவையாளர் பிரிவு குடும்ப பதிவு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

இப்பிரிவு மக்களை தமது குடும்பப்பதிவு அட்டைகளுடன் அளவெட்டி கிழக்கு கிராமசேவையாளரை சந்திக்கும்படி கோரப்பட்டுள்ளது. [86]

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின்பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர் வரும் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் அ. கனகசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

## நாட்டுக்கு துரோகமிழைப்போர் எம்மத்தியிலே உள்ளனர்

(மொன்றாகலை)

### ஜனாதிபதி

வெளிநாட்டு சக்திகளின் கூலிக்காரர்களாக மாறி எமது நாட்டுக்கு மீண்டும் துரோகம் செய்ய பல துரோகிகள் எம்மத்தியில் உள்ளனர்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புத்தல கிராம எழுச்சி விழாவில் உரையாற்றும்போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

காலனித்துவ எஜமானர்களின் அடிவருடிகளாக செயற்பட்ட உள்ளூர் துரோகிகளை பின்பற்றி நடப்பவர்கள் இந்நாட்டிலே உள்ளனர்.

இவர்களிடமிருந்து நாட்டைக் காப்பதில் நாம் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும். [கே]

## பாராட்டும் பட்டமளிப்பும்

(யாழ்ப்பாணம்)

தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் குருமார்கள் மூவரின் சேவையைப் பாராட்டிபட்டமளிக்கப்பட்டதுடன் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது,

இந்நிகழ்ச்சியில் சிவஸ்ரீ இ. இரத்தினேஸ்வரக்குருக்கள் கல்வியங்காடு சிவஸ்ரீ அ. நடராஜக் குருக்களால் ''கிரியாக்கிரம வித்தகர்'' என்றும், சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக்குருக்கள் நாயன்மார்கட்டு சதா. மகாலிங்க சிவக் குருக்களால் ''சாதக ஞான பானு'' என்றும் சிறப்புப் பட்டம் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர். செல்வன் வை. இராமேஸ்வர ஐயர் நாயன்மார்கட்டு சதா மகேஸ்வரக்குருக்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்ச்சியில் திரு. இ. ஜெயராஜ் உட்பட பல அறிஞர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

## வாலிபர் பாசறை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வை. எம். சி. ஏ. ஆதரவில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க உதவியுடன் 'தலைமைத்துவமும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தலும் என்ற தலைப்பில் வாலிபர்பாசறைஒன்றுஅண்மையில் நடைபெற்றது.

நவாலி, பண்டத்தரிப்பு வை. எம் சி. ஏ யிலிருந்து 60 வாலிபர்கள் கலந்துகொண்டனர். டபிள்யூ. என். தேவகடாட்சம் இப்பாசறையை நடாத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. [சு]

## இலக்கிய சிந்தனை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்ட வெள்ளியாண்டு நிகழ்ச்சித் தொடரில் இரசிகமணி கனக செந்திநாதன், மதுரகவி இ. நாகராஜன் பத்திரிகையாளர் எஸ். செல்லத்துரை நினைவாக இலக்கிய சிந்தனை அரங்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் இம்மாதம் 28 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (சு)

## கொழும்பில் சவூதி அரேபிய தூதரகம் அமைக்க முயற்சி

(கொழும்பு)

சவூதி அரேபிய தூதரகம் ஒன்றை கொழும்பில் அமைக்குமாறு சவூதிஅரேபிய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் அநேக இலங்கையர் வேலை செய்வதனாலும் சவூதி அரேபிா உதவிகளை பெறுவதற்காக இத்தூதரகம்உதவும்எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக முஸ்லிம் கலாச்சார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் இங்கு வந்துள்ள சவூதி அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (கே)

## சத்துணவு தயாரித்தல்; செயல்முறை வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைப் பிள்ளைகள் ஊட்டச் சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை ஓரளவாயினும் நிவர்த்தி செய்யும் முகமாகப் பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் தாய்மாருக்கு உள்ளூரில் கிடைக்கக்கூடிய வளங்களிலிருந்து சத்துணவு தயாரிக்கும் வழிகள் பற்றிய செயல்முறை சுகாதாரக் கல்வி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

''யூனிசெப்'' உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படைச்சேவைகள் நிகழ்ச்சித் திட்டப் பிரிவினரால் முதற் கட்டமாக 6 வகுப்புகளை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

★ தமிழகத்திலுள்ள

# தமிழர்களை திருப்பி அனுப்புவது கொலைக்களத்திற்கு அனுப்புவதாகும்

## பண்ருட்டி கண்டனம்

(சென்னை)

"இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது, இலங்கைத் தமிழர்களை கொலைக்களத்துக்கு அனுப்புவது போன்றதாகும்"

இவ்வாறு சென்னையில் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் பண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு ஊரடங்கு அமுலாக்கப்பட்டுள்ளது. முப்படைகளினால் சிங்கள அரசு தமிழர்களை தாக்குகின்றது. கடற்படை, விமானப்படை மற்றும்பீரங்கிகளைக் கொண்டும் 45 ஆயிரம் துருப்புக்களைக் கொண்டும் தமிழ்மக்களை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி தொடர்ந்து இனப்படுகொலை நடந்தால், யாழ்ப்பாணத்தில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் சாகடிக்கப்படுவார்கள் என்றார். (க)

## சித்திர சிற்பக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் சித்திரங்கள், சிற்பங்கள் அடங்கிய கண்காட்சி நேற்று பி பகல் 2-00 மணிக்கு ஆரம்பமானது. இக் கண்காட்சி இன்றும நாளையும் தொடர்ந்து இடம் பெறும்.

## நிவாரணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்படைந்து தெல்லிப்பளை. சண்டிலிப்பாய் பகுதிகளிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு மேலும் இரு வாரங்களுக்கு உலர் உணவு வழங்கும்படி யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் உத்தரவிட்டுள்ளார். (வி)

## இஸ்ரேலிய தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி

(டெல்அவிவ்)

இஸ்ரவேலில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிற் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. தொழிற்கட்சித் தலைவர் ஜிக்சாக் ரொபின் ஜூலை 13-ம் திகதி ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

மொத்தமாகவுள்ள 120ஆசனங்களில் தொழிற்கட்சியும் அதன் இடதுசாரி கட்சிகளும் அரபு இஸ்ரேலிய கட்சிகளும் 62 ஆசனங்களை கைப்பற்றியுள்ளன, தற்போதைய பிரதமரான ஷமீரின் லிக்குவிட் கட்சியும் அதன் வலது சாரிக கட்சிகளும் 58 ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

1969இற்குப்பின் ஷாமிரின் லிக்குவிட் கட்சி படுதோல்வியடைந்தது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## சீக்கிய போராளித் தலைவர் கைது

(சண்டிகார்)

பஞ்சாப்பின் சீக்கிய போராளித் தலைவர் சிம் ரஞ்சித் சிங்மான், பஞ்சாப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

இன்று நடைபெறவிருக்கும் அகாலிதள் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ளுமுகமாகப் பயணம் செய்தபோதே இவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9ம் திகதி சீக்கியப் போராளிக் குழுவுக்கும், பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில், 6 கிராமவாசிகள் கொல்லப்பட்டார்கள் என்று கூறப்பட்டதற்கு மறுப்புத் தெரிவிக்குமுகமாகவே மேற்படி கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம். (க)

### கஞ்சிகுடிச்சாறில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரும் பெருமளவில் குவிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

பல இடங்களிலும் படையினரை வழிமறித்து புலிகள் கடும் தாக்குதலை நடாத்தியதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### ராஜீவ் கொலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கோரிக்கை விடுத்தனர்.

இதை நீதிபதி திரு சுந்தர பாண்டியன் ஏற்றுக்கொண்டு இது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் கூறி வழக்கை அடுத்த மாதம் 7ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வி)

### பதுக்கலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருதுகின்றோம். இங்கு போதுமான மண்ணெண்ணை கையிருப்பிலுள்ளது.

இவ்வாறு தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா நடேசன் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்;

பொதுமக்களின் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவோர் மீதும் கூடிய விலையில் விற்போர் மீதும் அபராதம் விதிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட காலத்திற்குத் தடுத்து வைக்கப்படுவர் இவ்வாறு மக்களின் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவோர், கூடிய விலையில் விற்போர் பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள காவல் பணிமனைக்கு உடனுக்குடன் தெரிவிக்குமாறு சகல பொது மக்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்

பொதுமக்கள் கொடுத்த தகவலை வைத்து கூடிய விலையில் விற்றார்கள் எனும் சந்தேகத்தின்பேரில் ஒருசில மண்ணெண்ணை வர்த்தகர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### இந்தியா சென்று

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தரணி திரு. மோதிலால்நேரு கொழும்பில் தெரிவித்தார்.

மேற்படி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எட்டு சந்தேக நபர்கள் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர்கள். இவ்வழக்கில் தங்களுக்காக ஆஜராகுமாறு அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தின் பேரிலேயே நான் இவ்வழக்கில் வாதாடப்போகின்றேன்.

நான் இலங்கை ஜனாதிபதி சட்டத்தரணி ஆகவே எந்தச் சட்டமும் நான் இந்தியா செல்வதற்கு தடைபோட முடியாது அத்துடன் நான் ஒரு ராணி சட்டத்தரணி [கியூ ஸி] அதனால் இந்தியாவிலும் நான் நீதிமன்றங்களில் ஆஜராவதற்கு இந்திய நீதித்துறைச் சட்டம் ஏதும் குறுக்கே நிற்காது என்று திரு.மோதிலால்நேரு மேலும் தெரிவித்தார். [வி]

## திங்கள் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்கள் நடத்தும், பல்கலைக்கழக அனுமதிமுறைக்கு எதிரான பேரணி எதிர்வரும் திங்கள் 29-ம் திகதி காலை 9-00 மணிக்கு நடைபெறுமென கடந்த செவ்வாய் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்டது என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

## ஆசிரியை சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

அலம்பில் பகுதியில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது இளம் ஆசிரியை ஒருவர் படையினரிடம் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது. (50)

## மட்டுநகரில் புலிகள்

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொக்கட்டிச்சோலை ஆகிய முகாம்களிலிருந்து பெருந்தொகையான இராணுவத்தினர் பாரிய கவச வாகனங்களுடன் வந்தபோது, விடுதலைப் புலிகளின் மற்றுமொரு அணியினர் இவர்கள் மீது மேற்கொண்ட அதிவேகத் தாக்குதலினால், இராணுவத்தினர் தமது முயற்சிகளைக் கைவிட்டு இழப்புக்களுடன் முகாம்களுக்குத் திரும்பினார்கள்.

இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரி 56-2 ரகத் துப்பாக்கிகள் 2. ரி 56 புதிய ரகத் துப்பாக்கி-1 அதற்குரிய ரவைக் கூடுகள் 15, ரி 81 ஒன்று ரகத் துப்பாக்கி -1, அதற்குரிய ரவைக்கூடுகள் 4, நடுத்தர ரவைகள் - 500, ஜே ஆர். கைக்குண்டுகள் – 3, 40 மி.மி. எறிகணைகள் - 6, சிறிய ரகக் கிளைமர் –1, வெடிக்கவைக்கும் கருவி - 1, மின்கடத்திச்சுருள் - 1, ரவைக்கூடு அணிதாங்கிகள் - 3. [வி]

### வீரச் சாவு

மேற்படி மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2 போராளிகள் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர்.

மேஜர் பயில்வான் (சின்னத்தம்பி சிவராசா–கொக்கட்டிச்சோலை, முனைக்காடு), கப்டன் கீர்த்தி (வைலாசபிள்ளை உதயகுமார் -களுவாஞ்சிக்குடி எரிவில்). இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (வி)

## இன்று

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி, இடையில் சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள் பற்றி இன்று கல்வி அமைச்சில் மாநாடு நடைபெறவுள்ளது. (கே)

ஃ ஃ ஃ

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் வலைப்பந்து கற்பிக்கும் பயிற்றுநர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இன்று 25 ஆம் திகதி வியாழக்கிழமையும் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் நடைபெறவுள்ளது.

வலைப்பந்தாட்ட பயிற்றுநர் ஆசிரியர்கள் அனைவரையும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் வி. மகேசவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார். [139)

## ஊரியான் பாதையால் வழமையானபோக்குவரத்து

(பளை)

கொழும்பு செல்லும் பயணிகளும், யாழ்ப்பாணம் வரும் பயணிகளும் ஊரியான் பாதையால் எந்தவித சிரமமுமின்றி பயணத்தைத் தொடருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் எதுவித இராணுவ நடவடிக்கைகளும் இல்லையென பயணிகள் தெரிவித்தனர்.

ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து இயக்கச்சிப் பக்கமாக இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை நடாத்தி வருகின்றனர். இவை இரவு வேளைகளில் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடிக்கின்றன.

இப்பாதைகள் ஊடாக பெருமளவு உணவுப் பொருள்கள், மண்ணெண்ணை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் பெருமளவில் எடுத்துவரப்படுவதாகவும் நேற்றிரவு இங்கு வந்த பயணிகள் தெரிவித்தனர். (எஸ்)

### மஹாராஜபுரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது வீதியில் நிற்பாட்டப்பட்டிருந்த ட்ராக்டருடன் எதிர்பாராதவிதமாக மோதியதாலேயே மேற்படி விபத்துஇடம் பெற்றுள்ளது.

சங்கீத கலாநிதி, பத்மஸ்ரீ போன்ற விருதுகளைப் பெற்ற இவர் யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் இராமநாதன் அக்கடமியின் முதல்வராக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழக அரசின் ஆஸ்தான வித்துவானாகவும் இவர் கடமையாற்றியுள்ளார். (க)

### பேராசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் சட்ட வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றி வந்துள்ளார். (56)

### யாழ்ப்பாணம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டத்துக்கு வேண்டிய உணவுப் பொருட்களும், மண்ணெண்ணையும் லொறிகளில் யாழ். நகருக்குள் வருவதாக கொம்படிப் பகுதியில் உள்ள தொழிலாளர்கள் தெரிவிக்கின்றார்கள்

இந்த மண்ணெண்ணைப் பதுக்கலை முறியடிப்பதற்கு தமிழீழக் காவல்துறையினர் பெரும முயற்சி எடுத்துவருகின்றார்கள். நேற்று பல பதுக்கல் பேர்வழிகள் இவர்களிடம் வசமாக மாட்டிக்கொண்டார்கள். [வி]

### மெக்கா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் எடுத்துச் செல்லப்பட்டன.

2 லட்சம் யாத்திரிகர்கள் பங்குகொண்ட இவ்ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்காவையும், இஸ்ரேலையும் கண்டித்து தமிழில் பல சுலோக அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இம்முறை நடைபெற்ற ஊர்வலத்தில், முதல் தடவையாகச் சவூதி மக்களும் கலந்து கொண்டதுடன், அமெரிக்காவுக்கு எதிராகவும் கோஷமிட்டனர். (சி)

வட பிரதேச

நல்லொழுக்க சம்மேளனத்தினர்

நடாத்தும்

சர்வதேச போதைப் பொருள்

எதிர்ப்பு தினம்

யூன் 26

இடம்: வட பிரதேச நல்லொழுக்க சங்கப் பணிமனை. தொல்புரம், சுழிபுரம்.

காலம்: 26-06-1992 மாலை 3-00 மணி.

நிகழ்ச்சிகள்:

★ சிறப்புரைகள், ★ நாடகம்,

★ பட்டி மண்டபம், ★ நடனம்.

நல்லொழுக்கச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

தொல்புரம், சுழிபுரம்.

(சி 6459)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Nnmber B/10336/1